# பதிமூனாவது மையவாடி நாட்டுப்புறக் கூறுகள்

***க. ஸ்டெல்லாமேரி***
பதிவு எண்: 21221074022003, முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)
தமிழ்த்துறை ஆய்வு மையம்
சி.எஸ்.ஐ.ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி
நல்லூர், தென்காசி

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958717

### முன்னுரை

தமிழரின் அன்றாட வாழ்வில் பெரும்பாலும் வாய்வழியாக வழங்கி வந்த கதைகள், நம்பிக்கைகள், விடுகதைகள் ஆகியவை அடங்கியுள்ளன. ஆனால் நகர்புறச்சூழலில் இவை காணப்படுவதில்லை. கிராமப்புறத்தில் காணப்படும் மக்களிடம் இத்தகையக் கூறுகள் அதிகம் காணப்படுகின்றன. சோ.தர்மனின் பதிமூனாவது மையவாடி என்ற நாவலிலும் நாட்டுப்புறக் கூறுகள் காணப்படுகின்றன.

### நாட்டுப்புறக் கூறுகள்

ஒரு தலைமுறையினர் தனக்கு அடுத்து வரும் சந்ததிகளுக்கு நீதியையும் பிற உயிர்களின் முக்கியத்துவத்தையும் உணர்த்துவதாக அமைவது நாட்டுப்புறக் கதைகளும் மக்களின் நம்பிக்கைகளும். இந்நாவலிலும் நாட்டுப்புறக் கதைகள், மக்கள் கடவுள் மீது கொண்டுள்ள நம்பிக்கைகள், பேய் பற்றிய நம்பிக்கைகள், கடவுள் தங்களை ஆபத்தில் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை, பறவைகளைத் துன்புறுத்தினால், அதன் தோஷம் நம்மை ஏழேழு ஜென்மத் திற்கும் விடாது என்கிற நம்பிக்கைப் போன்ற பல நம்பிக்கைகளும், ஓணான் மற்றும் அணில் பற்றிய நாட்டுப்புறக் கதையும் இதில் காணப்படுகின்றன. இவை மட்டுமின்றி பேய் விரட்டுதல் மற்றும் வசியம் செய்தல் போன்றவை பற்றியும் கூறுகிறது.

### ஓணான் மற்றும் அணில் பற்றிய கதை

உருளக்குடி கிராமத்தில உள்ள சிறுவர்கள், மாட்டின் வாலில் உள்ள உரோமத்தைப் பிடுங்கி கண்ணி தயார் செய்து வேலிச் செடிகளில் மறைந்து நிற்கும் ஓணானைத் தேடிப்பார்த்து ஓணானைப் பிடிப்பர். பிடித்த ஓணான் மூக்கில் மூக்குப் பொடியைப் போட்டு விளையாடுவர். இதற்குக் காரணம் நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் ஓணான் சாமிக்கு மூத்திரம் கொடுத்த கதைதான். அக்கதையை இந்நாவலில் காணலாம்.

தண்ணீர் தட்டுப்பாடு மனிதர்களுக்கு மட்டும்தான் வருமா? கடவுளுக்கு வராதா? என்று இக்கதை ஆரம்பிக்கிறது. கடவுளுக்கு தண்ணீர் தட்டுப்பாடு வர குடிக்க ஒரு சொட்டு தண்ணீர் கூட கிடைக்காமல் புமிக்கு தகவல் அனுப்புகிறார். ஆனால் அவ்வளவு உயரத்திற்கு பறவைகளாலும் மிருகங்களாலும் கொண்டு போக முடியாததால் பறவைகளும் மிருகங்களும் கைவிடவே கடவுளே புமிக்கு வருகிறார்.

கடவுள் இவ்வாறு புமிக்கு வரும்போது கடவுளுக்கு ஒரு வித்தியாசமான தத்தம் கேட்கவும் சுற்றும் முற்றும் பார்த்தார். அப்பொழுது ஒரு மரத்தின் உச்சியிலிருக்கும் அணில் கூப்பிட்டுக் கொண்டிருந்தது. அதன் முதுகில் ஓர் இளநீர் இருந்தது. கடவுள் இளநீரை வாங்கிக் குடித்தாராம். குடித்துவிட்டு அணிலின் முதுகில் தடவினாராம். அதனால்தான் அணிலின் முதுகில் மூன்று கோடுகள் உள்ளன என்பதை, “தன் தாகம் தீர்த்த அணிலே வாஞ்சையாக முதுகில் தடவினார். அன்றைக்குக் கடவுள் தடவிய தடம்தான் அணில்களின் முதுகில் மூன்று கோடுகளாய் படிந்து கிடக்கின்றன.” (ப.24) என்று கூறுவதிலிருந்து பெரியவர்கள் கூறிய கதை சிறுவர்கள் மனதிலும் ஆணித்த ரமாக பதிந்து இருப்பதைக் காணமுடிகிறது.

இதற்காக கடவுள் அணிலுக்கு ஒரு வரமும் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது. அணில் எவ்வளவு உயரத்திலிருந்து நீ தரையில் மரம்விட்டு மரம் தாவலாம். அவ்வாறு எவ்வளவு உயரத்தில் இருந்து குதித்தாலும் அடுத்த நொடியே நீ ஓடலாம் என்கிற வரத்தைக் கொடுத்ததாக, இந்நாவலில் ஆசிரியர் கூறுகிறார்.

கடவுள் இவ்வாறு வரம் கொடுத்த அன்றிலிருந்துதான் அணில் கிளைவிட்டு கிளைதாவவும் உயரத்திலிருந்து குதிக்கவும் கற்றுக்கொண்டதாம். கடவுள் கைவைத்து முதுகில் தடவியதாக தான் மூன்று கோடு கள் அழகாய் விழுந்தன எனவும் மக்களிடம் இன்றளவும் இக்கதைகள் கூறப்படுவதைக் காணலாம். கடவுளுக்கு அணில் இளநீர் கொண்டுவந்து கொடுத்ததைப் போன்று கடவுள் ஓணானிடம் நீர் கேட்க, ஓணான் மூத்திரம் கொடுத்ததால் கடவுளின் சாயத்திற்கு உள்ளாகியது. எனவேதான் ஓணான் பார்ப்பதற்கு அருவருக்கத்தக்கதாகவும், மரம் விட்டு மரம் தாவவும் அணிலைப் போன்று வேகமாக மரம் ஏறத் தெரியாமலும் எளிதில் சிறுவர்களிடம் பிடிபடவும் செய்கிறதாம், என்பதை, “தாகத்திற்கு தண்ணீர் கேட்ட எனக்கு மூத்திரத்தைக் கொடுத்து அவமானப்படுத்திய நீ இன்றிலிருந்து அருவருக்கத்தக்க உருவத்தில் வாழக் கடவாய். அணிலைப் போல் வேகமாக மரமேற முடியாமல் போவாய். கிளைவிட்டு கிளைத்தாவும் திறமை மறைந்து போகும் உச்சி மரத்திலிருந்து குதித்தால் உடல் சிதறி சாவாய், சின்னவர் சிறியவர்களிடமெல்லாம் அகப்பட்டு சித்திரவதைக்குள்ளாகி சாவாய் (ப.25) என இந்நாவலில் கூறப்பட்டுள்ள இக்கதை பெரும்பாலும் கிராமங்களில் கேட்கப்படும் கதைகளில் ஒன்றாகும்.

மேலும், இக்கதையின் மூலம் எப்பொழுதும் எல்லோருக்கும் நன்மையே செய்ய வேண்டும் எனவும், பிறருக்கு நன்மை செய்தால் நமக்கும் அந்த நன்மையின் பயன் பலமடங்கு கிடைக்கும். அதேப்போல் நாம் ஒருவருக்குத் தீமை செய்தால் அந்த தீமையே நமக்குத் திரும்பி வரும். ஆகவே எல்லோரும் நன்மை செய்ய வேணடும் என்னும் கருத்தை சிறு வயதிலேயே சொல்லிக் கொடுப்பதற்கு உதாரணமாக இக்கதை விளங்குகிறது.

**நம்பிக்கைகள்**

மனிதனுக்கு அடிப்படையான குணங்களில் ஒன்றுதான் நம்பிக்கை. நம்மால் இதனைச் செய்துமுடிக்க முடியும் என்று நம்புவதே அவன் வாழ்வில் வெற்றியடையச் சிறந்த வழிமுறையாகும். சமூகத்தால் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வரும் சில செயல்கள் தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வரும் சில செயல்கள் சமூகத்தின் எழுதாதச் சட்டமாக உள்ளன. மனிதர்கள் இக்கால கட்டத்தில் மட்டுமின்றி பண்டையக் காலத்தில் இருந்தே கடவுள் மீதும் விதி மீதும் நம்பிக்கை

உடையவர்களாகவே இருந்து வருகின்றனர். தனக்கு நடக்கும் நன்மை தீமை ஆகியவற்றிற்கு விதியே காரணம் என நம்புவதைப் பண்டையக் காலம் முதல் தற்காலம் வரை காணமுடிகின்றது.

### கடவுள் நம்பிக்கை

இறைவன் பற்றிய நம்பிக்கை எல்லா மனிதர்களிடமும் இருக்கக்கூடிய ஒன்றாகும். சிலர் கடவுள் இல்லை என்றுக் கூறினாலும், நாளைக்கு நடப்பதை தீர்மானிக்க முடியாது. ஆகவே மனிதன் இயக்கும் அந்த சக்திக்கு மனிதன் பல்வேறு உருவங்களை பல்வேறு பெயர்களை வைத்து வழிபடுகிறான் என்பது தான் நிதர்சனமான உண்மை.

தாங்கள் கும்பிடும் குலதெய்வ கோவிலுக்குச் சென்று நாம் நினைக்கும் செயல் அல்லது செய்யும் காரியம் நடக்குமா, வெற்றியடையுமா என்று பூப்போட்டுப் பார்த்தல் இன்றளவும் மக்களிடையே இருக்கும் நம்பிக்கைகளில் ஒன்றாகும். இரண்டு வெற்றிலைகள் அல்லது ஏதேனும் இரண்டு பொருட்களில் வெவ்வேறு நிறமுடைய புக்களைக் கட்டி சாமியின் முன்பு போட்டு சிறு குழந்தையை விட்டு எடுக்கச் சொல்வர். அதில் தாம் நினைக்கும் பூ வந்தால் நாம் நினைக்கும் செயல் அல்லது போகும் காரியம் வெற்றியடையும் என்று மக்கள் இன்றளவும் நம்புகின்றனர்.

கருத்தமுத்துவின் தாய் பெரியதாயும், தந்தை இருளாண்டியும் அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க போகும்போது ஹாஸ்டலில் இடம் கிடைக்குமா என்று தெரிந்துக்கொள்ள அவர்களின் குலதெய்வமான சோலையம்மனிடம் பூ கட்டிப் போட்டு பார்க்கிறார்கள். அவ்வாறு ஹாஸ்டலில் இடம் கிடைத்துவிட்டால், அடுத்த வருசம் பதினெட்டாம் பெருக்கிற்கு கிடாய்வெட்டி பொங்கல் வைப்பதாக நேர்த்திக்கடன் வேண்டியிருப்பதைக் கோவில் புசாரியிடம் கூறி சாமிக்கு பூப்போட்டு பார்க்கக் கூறுகிறார்கள். பூசாரியும் ஒரு வெற்றிலையில் வெள்ளைப்பூவும், ஒரு வெற்றிலையில் அரளிப்புவும் வைத்து ஒரு மறைவிடத்தில் வைத்துக்கட்டி கோவிலில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறு குழந்தையைக் கூப்பிட்டு அதை எடுக்கக் கூறினார். வெள்ளைப்பூ வந்ததைப் பார்த்ததும் கருத்தமுத்துவின் தாயும், தந்தையும் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

குலதெய்வக்கோவிலில்புகெட்டிப்போட்டுப் பார்த்து சாமி உத்தரவுக் கொடுத்தப்படி கருத்தமுத்துவுக்கும் கோவில்பட்டியில் தான் படிக்கும் பள்ளிக்கூடத்தின் ஹாஸ்டலில், இடம் கிடைத்தது என்பதையும் இந்நாவல் மூலம் அறியலாம். இன்றளவும் மக்களிடம் இந்த நம்பிக்கை இருப்பதையும் வீட்டில் ஏதாவது ஒரு நல்லக்காரியம் நடக்கும்போதோ அல்லது தொழல் தொடங்கும் போதோ குலத்தெய்வக் கோயிலிலோ வீட்டில் சாமி போட்டோ முன்போ பூக்கெட்டிப் போடுவதைக் காணமுடிகின்றது. ஆண் தெய்வம் எனில் சிவப்பு பூவும் பெண் தெய்வம் எனில் வெள்ளைப்பூவும் கொடுத்தால் தாம் நினைத்தக் காரியமோ, செய்யும் செயலோ எந்த ஒரு தடங்களும் இன்றி நிறைவேறும் என்பதை மக்கள் இன்றளவும் நம்புவதையும் கடவுள் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையும் காணமுடிகின்றது.

### பேய் பற்றிய நம்பிக்கை

நம்மைக் காப்பதற்கும் நன்மை செய்வதற்கும் நல்ல சக்தி இருப்பதுபோல், அதற்கு எதிர்மறையான சக்திகளும் இருப்பதாக மக்கள் நம்புகின்றனர். அதற்கு பேய், பிசாசு, முனி, மோகினி என்றுப் பெயர்களும் வைத்தருந்ததையும் காணமுடிகின்றது.

சிறுவர்கள் தனியாகச் செல்வதையும், அவர்கள்நீர்நிலைகள்மற்றும்காடுகளில்தனியாக விளையாடச் செல்வதையும் தடுப்பதற்காகக் கூட கிராமப்புறங்களில் பெரியவர்கள் சிறியவர்களிடம் கூறியிருக்கலாம். ஒரு நாள் சுப்பிரமணி என்னும் பையன் பனைமரத்திலிருந்து விழும் பனம் பழத்தை எடுப்பதற்காக அதிகாலையிலேயே சென்று பனம் மரத்தடியில் குனிந்து பனம்பழம் எடுத்தப்போது மேலிருந்து இரண்டு, மூன்று பழங்கள் விழுந்தபோது சுப்பிரமணியன் பயந்துபோய் மயங்கி விழுந்துவிட்டான். அவனைக் காணவில்லை என்று அவனுடைய

அம்மாவும் அப்பாவும் அவனைத் தேடிச்சென்ற போது அவன் ஒரு பனைமரத்தினடியில் வெயில் முகத்தில் பட்டும் எந்திரிக்காமல் படுத்திருந்தான். ஊரில் உள்ள எல்லோரும் ஒன்றுகூடி நின்றனர். அவனை எழுப்பிய போது பரக்கப்பரக்க முழித் திருக்கிறான். பின்பு ஊரில் போய் முட்டை வாங்கி வந்து முட்டை சுற்றிப் போட்டனர். "ஊருக்குப் போய் முட்டை கொண்டு வந்து மூன்று தரம் தலையைச் சுற்றி எறிந்தபின் கூட்டி வந்தார்கள்" *(ப.21)* என்பதிலிருந்து முட்டைச் சுற்றிப் போடுதல் இம்மக்களிடையே இருந்ததை அறியமுடிகிறது. தற்காலத்திலும் கிராமப்புறங்களில் சிறுதெய்வக் கோவில்களில் சாமி ஆடுபவர்களிடம் வெள்ளி மற்றும் செவ்வாய் கிழமைகளில் சாயங்காலம் ஆறு மணிக்கு மேல் உடல் நலம் சரியில்லாதவர்களுக்கு முட்டைச் சுற்றிப் போடுவதைக் காணமுடிகிறது. பேய்ப்பிடித்தவர்களுக்கு இவ்வாறு முட்டைச் சுற்றிப் போட்டால் பேய் அவர்களை விட்டுப் போய்விடும் என்று மக்கள் நம்புவதை இதன் மூலம் அறியலாம்.

முனியாண்டி என்பவன் இவ்வாறு ஒரு நாள் பனம்பழம் சாப்பிடும் ஆசையில் பனம்பழம் எடுக்கச் சென்றிருக்கிறான். ஒரு பனைமரத் தின் அடியில் பனம்பழம் கிடைக்கவே அதை எடுக்க அவன் குனிந்தபோது பனம்பழம் அங்கு இல்லை. நிமிர்ந்து பார்த்தால் கொஞ்ச தூரத்தில் கிடந்திருக்கிறது. அவன் மீண்டும் குனிந்து எடுக்கப்போக மீண்டும் பனம்பழம் சிறிது தொலைவு தள்ளி கிடக்கிறது. ஆனால் முனியாண்டி பனம்பழம் சாப்பிடும் ஆசையில் சுற்றும் முற்றும் பார்க்காமல் பனம்பழத்தை எடுப்பதற்காக அதன் பின்னாடியேச் செல்ல தரையில் இருந்த கிணற்றில் விழுந்த பின்பே அவன் சுயநினைவுக்கு வந்ததை, "முனியாண்டி தன் தரையாய் இருந்த கிணற்றுக்குள் டமீர் என்று விழுந்த போதுதர் முனியாண்டி தன் உணர்வு பெற்றான்" *(ப.22)* என்பதன் மூலம் அறியலாம். அவன் கூப்பாடு போட்டதில் ஊரே கூடிவிட்டது. பேய்தான் இவனை இப்படி கூட்டி வந்து கிணற்றில் தள்ளிவிட்டது என பேசினர்.

பெரியவர்கள், சிறுவர்களை பனம்பழத்திற்கு பேய் வரும். அதனைப் பார்த்த உடனே கீழே குனிந்து உடனே எடுக்கக்கூடாது என்றும் கூறினர். "பழுத்து விழுந்து கீழ கெடக்கிற பனம்பழத்திற்கு எங்க இல்லாத பேயும் வரும்" என்று கூறுதிலிருந்து பேய் பற்றிய நம்பிக்கை இம்மக்களிடம் இருப்பதை இந்நாவல் மூலம் அறியலாம். அதுமட்டுமின்றி படித்த பார்த்த உடன் எடுக்கக்கூாது. காலால் ஒரு எத்து எத்தி தள்ளிவிட்டு எடுக்கும்போது மூன்று தடைவ எச்சில் துப்பி எடுத்தா காத்து கருப்பு அண்டாது எனவும் பெரியவர்கள், பனம்பழம் எடுக்கச் செல்லும் சிறுவர்களிடம் கூறும்போது எச்சில் துப்பினாள் பேய் பிடிக்காது என்றும் கூறுகின்றனர். இன்றளவும் கிராமத்தில் உள்ள மக்களிடையே வெளியில் எங்கும் போய்விட்டு இரவில் வீட்டிற்கு திரும்புவர்களைக் காலை கழுவிவிட்டு மூன்று முறை வாசலில் எச்சில் துப்பிவிட்டு வருவமாறு கூறுவதையும், அதனால் பேய், பிசாசு போன்ற தீய சக்திகள் தங்கள் குடும்பத்தைச்சார்ந்தவர்களைஒன்றும்செய்யாது என்ற நம்பிக்கை கொண்டிருப்பதையும் கிராமப்புற மக்களிடையே காணமுடிகிறது.

### தோஷம் பற்றிய நம்பிக்கை

ஊரில் உள்ள சில பெரியவர் புளியமரத்தடியில் அமர்ந்து ஆடுபுலி ஆட்டம் விளையாடிக் கொண்டிருந்த போது கிளி ஜோசியம் பார்க்கிறவன் "கிளி ஜோசியம் பார்க்கலையா" என்று சத்தம் போட்டுக் கொண்டே வந்தான். அந்த கிளி ஜோசியம் பார்ப்பவனிடம் அங்கிருந்தவர்களும் குளத்தில் குளித்து முடித்து வந்தவர்களும் ஜோசியம் பார்க்க அவன் அவரவர் பெயர்களை கிளியிடம் கூறி அது எடுத்துத் தரும் சீட்டிற்கு ஏற்றாற்போல் பலன்களை அவரவர்க்கு கூறிக் கொண்டிருந்தான். ஒரு இளைஞனுக்கு அவன் பெயர் சொல்லி கிளியைச் சீட்டு எடுக்க சொல்ல அது எடுத்துச் சீட்டில் தேவதையின் படம் இருக்கவே உனக்கு சீக்கிரம் திருமணம் நடைபெறும் என்றுக் கூற அங்கே கூடியிருந்தவர்கள் அனைவரும் சிரித்தனர்.

அந்த நேரத்தில் பேச்சியப்பன் என்பவர் குடித்துவிட்டு தள்ளாடிய படியே நடந்து வந்து கிளிஜோசியம் பார்ப்பவனிடம் அருகில் வந்து தனக்கும் கிளியை ஒரு சீட்டு எடுக்குமாறு கூறினார். அதற்கு, ஜோசியக்காரன் "காணிக்கை வைக்கலனா கிளி சீட்டு எடுக்காது" என்றுக் கூறினான். அதைப் போன்று கிளியும் சீட்டு எடுக்கவில்லை. இதனால் கோபமடைந்த பேச்சியப்பன் என்னைப் பார்த்தா இந்த ஊரே நடுங்குது என்றுக் கூறிக்கொண்டே கிளிகள் இரண்டையும் பெட்டியுடன் எடுத்து குளத்தில் வீசிவிட்டார். இதனால் கிளிகள் இரண்டும் இறந்துவிட கிளிஜோசியம் பார்ப்பவன் புள்ளய கொன்னப் பய வெளங்கமாட்டான். பட்சி தோசம் பிடிச்சா லேசுல போகாது என்றுக் கூறி விட்டு ஜோசியக்காரன் பேச்சியப்பன் போன திசையை நோக்கி மண்ணை வாரி தூற்றினான்.

அந்த பேச்சியப்பனின் மகன்தான் கன்னியப்பன். கன்னியப்பனின் பேரனுக்குப் பிறந்த இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் கிளிமுகம் மாதிரியே மூக்கு வெளியே நீட்டிக்கொண்டு முகம் விகாரமாக இருக்கிறது என்பதிலிருந்து தோசம் பற்றிய நம்பிக்கை இம்மக்களிடம் காணப்பட்டதை அறியமுடிகிறது. தற்காலத்திலும் கூட மக்களை நாகதோசம், பட்சி தோசம் போன்றவற்றிற்கு பரிகாரம் செய்வதைப் பார்க்க முடிகிறது. உதாரணமாக நாக தோசம் இருப்பவர்கள் நாகத்தின் சிலையை செய்தோ அல்லது செய்பவர்களிடமிருந்து வாங்கி அதனை ஒரு குறிப்பிட்ட நாட்கள் வீட்டில் வைத்து வழிபட்டு அதனை ஏதேனும் ஒரு கோவில்களில் கொண்டு வைத்து விடுது உண்டு.

## வசியம் செய்தல்

வசியம் என்பது மனிதர்களையோ, மிருகங்களையோ தன் வயப்படுத்துவதாகும். பெரும்பாலும் தனக்குப் பிடித்த பெண்ணை ஆணும், தனக்குப் பிடித்த ஆணை பெண்ணும் வசியம் செய்வர். இதனை ஒரு சில முறைகளில் செய்வர். மை வைத்து வசியம் செய்வர். சிலர் உடைமைகளை வைத்து வசியம் செய்வர். அதாவது வசியம் செய்ய நினைப்பவரின் தலைமுடி அல்லது அவர் உபயோகப்படுத்திய ஏதேனும் ஒரு பொருளை வைத்து அவரை வசியம் செய்வர்.

யாராவது ஒருவர் பேச்சை மட்டுமே கேட்டு ஒருவர் நடந்தால் அவ என்ன வசியம் செஞ்சாளோ என்று கூறுவதை இன்றளவும் கிராமப்புற மக்களிடையே காணமுடிகிறது. வெட்டியான் வேலை செய்யும் அரியான் தனக்கு தெரிந்த வாத்தியார் மனைவிக்காக ராக்கப்பன் என்பவனிடம் வசியம் செய்வது பற்றிக் கூறுகிறான்.

வாத்தியாருக்கு திருமணமாகி மூன்று குழந்தைகள் உள்ளன. அவருடைய மனைவி ஒரு அமைதியான ஆள் ஆனால் வாத்தியார் ஒரு வேதக்காரியுடன் சேர்ந்து கூத்தடிக்கிறார். இதையறிந்த அவருடைய மனைவி அரியானிடம் கூற இவன் வசியம், பேய் விரட்டும் தொழில் செய்யும் ராக்கனைத் தேடி வந்துள்ளான். இச்செய்தியை ராக்கப்பனிடம் அரியான் கூற ஒரு ட்பபாவில் மையும் இன்னொரு டப்பாவில் பொடியும் கொடுத்து மையை இரவில் தூங்கும்போது தலையில் தடவி விடவும், பொடியைப் பாலில் கலந்து அவருக்குத் தெரியாமல் குடிக்க வைக்க வேண்டும் என்று கூறுகிறான். ஒருவரை தன் வழிக்குக் கொண்டுவர அவரை வசியம் செய்வதையும், வசியம் செய்வதால் அவர் நம் வழிக்கு வருவார் என்ற நம்பிக்கையும் மக்களிடம் இருப்பதை பதிமூனாவது மையவாடி என்னும் நாவல்வழி அறியமுடிகிறது.

## குறிகேட்டல்

ராக்கப்பன் என்பவன் சோவிகளை உருட்டிப் பார்த்து குறி சொல்லுபவன். தன் மகள் வேறொரு ஜாதிப் பையனைக் காதல் செய்வதை அறிந்த தாயும், தகப்பனும் ராக்கப்பனிடம் குறிகேட்க வந்திருந்தனர். ராக்கனும் பூஜை அறையில் தான் வைத்திருக்கும் சிறுதெய்வங்களுக்கு சாம்பிராணி புகையைக் காட்டிவிட்டு சோவியை சாம்பிராணி புகையில் மூன்று தடவை சுற்றி கீழே போட்டுப் பார்த்து நடந்தவற்றைக் கூறுகிறான். வந்தவர்களும் அதை ஒத்துக்கொண்டு தன்மகளை அவனுடன் திருமணம் செய்து வைக்க கொண்டு

தன் மகளை அவனுடன் திருமணம் செய்து வைக்க தங்களுக்கு சம்மதம் இல்லையென்றும், அவள் தங்கள் வழிக்குக் கொண்டுவர என்ன செய்ய வேண்டும் என்று கேட்கின்றனர்.

மகளைப் பெற்றதாய் தன் மகள் காதலிப்பவன் வேலைக்குப் போகமாட்டான். ஊர் சுத்திக்கிட்டு அலையுறான். நல்ல பையன் என்றால் திருமணம் முடித்து வைக்கலாம் என்று கூறி, அவன் கை, கால் விளங்காம போகும்படி செய்யச் சொல்கிறான். அதற்கு ராக்கன் நம்ம பிள்ளையதான் நாம் அடக்கனும், அவன் எப்படி போனா என்ன என்று கூறுகிறார். "பாவம் அவன எதுக்கு நம்ம காலைக்கைய மொடக்கனும், நம்ம புள்ள நம்ம சொல் கேட்டு நம்ம வச த்துக்கு வரணும். அம்புட்டுதான, மத்தது எப்படி போனா என்ன, நம்ம காரியம் நெறவேறணும்." (ப.202) என்று ராக்கன் கூறுவதிலிருந்து அவன் இந்தத் தொழிலைச் செய்தாலும் ஓர் உயிருக்கு ஆபத்து வரக்கூடாது என்று நினைக்கிறான்.

கோரப்பள்ளம் கொன்னயராக்கன் என்பது தான் ராக்கனின் அடையாளம், இவன் மாந்திரீகம், சூன்யம் வைத்தல், மை வைத்தல், தகடு கட்டுதல் போன்ற மாய மாந்திரீக வேலைகள் செய்யக்கூடியவன். எப்படிப்பட்ட பெண்களையும் வசியப்படுத்தி விடுவான் இவன்.

இவை மட்டுமின்றி பிணத்தை எரிக்கும் போது முழுமையாக எரிக்க வேண்டும். ஏதேனும் ஓர் உறுப்பை கோரைப்படுத்தினால் கூட ஆத்மா சாந்தியடையாது என்பது வெட்டியான் அரியானின் நம்பிக்கை.

**முடிவுரை**

இதை செய்தால் கட்டாயமாக நாம் நினைப்பது நிறைவேறும் என்று மக்கள் நம்புகின்றனர். ஆகவே தாங்கள் வணங்கும் தங்கள் குலதெய்வத் திற்கு மொட்டை போடுதல், கிடா வெட்டுதல், பொங்கலிடுதல் போன்ற நேர்த்திக்கடன்களை இன்றளவும் மக்கள் செய்து கொண்டு தான் இருக்கின்றனர். அதைப்போன்று, முட்டைச் சுற்றிப்போடுதல், வசியம் செய்தல் போன்ற செயல்களின் மூலம் மக்கள் இன்றளவும் நம்பிக்கை வைத்திருப்பதைக் காணலாம். அதையே, இந்நாவலும் எடுத்துரைக்கிறது.